DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. O.S. No.47/2021

Petitioner side witness for P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | ...திரு. முத்துகிருஷ்ணன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.08.2025.**

முதல்விசாரணை:–

நான் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து தூத்துக்குடி வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை பெற்று அவர் அளித்த எழுத்துபூர்வமான அனுமதியின்பேரில் அழைப்பாணையில் கோரப்பட்டுள்ள ஆவணங்களுடன் சாட்சியமளிக்க வந்துள்ளேன். எனக்கு அளித்த அனுமதிக்கடிதம் சா.சா.ஆ–1 ஆகும். நான் மீளவிட்டான் பகுதி 1 கிராமம் சர்வே எண்.1590/1பி–ற்குரிய பட்டா கொண்டு வந்துள்ளேன். அந்த பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் ஜெயபாண்டி மகன் மகாலிங்கம் மகேஷ் என்பவர் பெயரில் உள்ளது. மேற்படி சொத்திற்கான பட்டா சா.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாளது தேதிவரை மேற்படி சொத்திற்கான பட்டா ஜெயபாண்டி மகன் மகாலிங்கம் மகேஷ் என்பவர் பெயரில்தான் உள்ளது. எந்த தேதி, மாதம் பட்டா இந்த நபருக்கு முதல்முதலில் வழுங்கப்பட்டது என்ற ஆவணங்கள் கொண்டுவந்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சர்வே எண்ணுக்குரிய புல வரைபடம் கொண்டு வந்துள்ளேன் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது. அது சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி புல வரைபடம் நாளது தேதி வரை அமலில் உள்ள புலவரைபடம் என்றால் சரிதான்.

குறுக்குவிசாரணை (பிரதிவாதிதரப்பில்)

பட்டா, FMB எந்த உரிமை ஆவணத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்று சொல்லமுடியுமா என்றால் சொல்ல இயலாது. உட்பிரிவு சம்மந்தமாக வட்டாட்சியர் அலுவலகத்தில் வழக்கின் வாதிக்கு கொடுக்கப்பட்ட வட்ட ஆட்சிதலைவரின் நடவடிக்கை அது வா.சா.ஆ–16 என்றால் சரிதான். எந்த

கிரைய ஆவணத்தின் அடிப்படையிலோ, அனுபவத்தின் அடிப்படையிலோ உள்ளதாக வா.சா.ஆ–16 ல் காணப்படுகிறதா என்றால் இல்லை. உரிமையில்லாத நபரிடமிருந்து பதிவு ஆவணங்களின் அடிப்படையில் கிரையமோ,செட்டில்மெண்டோ பெற்றிருந்தாலோ, அல்லது மோசடியாக கிரையமோ, செட்டில்மெண்டோ பெற்றிருந்தாலோ, பின்னிட்டு கொடுக்கப்பட்ட பட்டாவானது ரத்துசெய்யப்படும் என்றால் சரிதான். வழக்கு சர்வே சம்மந்தமாக நெடுங்காலமாக வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்துவந்து அதனை மறைத்து பட்டாதாரர் பட்டா பெற்றிருந்தாலோ அதன்அடிப்படையில் சப்டிவிசன் பெற்றிருந்தாலோ மேற்படி பட்டாவும், சப்டிவிசனும் நீதிமன்ற தீர்ப்பிற்குட்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி முழு சர்வே நம்பருக்கு வழக்கு நிலுவையில் இருக்கிறது என்று தெரிவித்திருந்தால் இதற்கு பட்டா கொடுத்திருப்போமா என்றால் கொடுத்திருக்க மாட்டோம். இந்த வழக்கின் வாதி பட்டா மாறுதல் சம்மந்தமாக முழுமையான நடைமுறைகள் சம்மந்தப்பட்ட ஆவணங்களை உள்ளடக்கிய TTR proceedings கோப்பை கேட்டிருந்தால் நாங்கள் தாக்கல் செய்திருப்போம் என்றால் சரிதான், ஆனால் கோரவில்லை. நான் கொண்டுவந்துள்ள ஆவணம் சா.சா.ஆ–1 மற்றும் சா.சா.ஆ.2 ல் பட்டா மற்றும் FMB ஐ சரிபார்க்க வேண்டுமென்றால் வருவாய்துறை கோப்புகளுடன் சரிபார்க்க வேண்டும் என்றுதான் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். எந்த பட்டா மாறுதலும், சப்டிவிசனும் நீதிமன்ற தீர்ப்பிற்குட்பட்டதுதான் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.